## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை

## திருவாரூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

(08.05.2024 முதல் 12.05.2024)

**அறிக்கைஎண்: 11/2024** **தேதி : 07.05.2024**

### திருவாரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 39 - 40 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 29 - 30 °செ ஆகவும் பதிவானது.

### திருவாரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (08.05.2024 முதல் 12.05.2024).

| கடந்த வார வானிலை (03.05.2024 முதல் 06.05.2024) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (08.05.2024 முதல் 12.05.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 03/05 | நாள்-2 04/05 | நாள்-3 05/05 | நாள்-4 06/05 | தேதி | நாள்-1 08/05 | நாள்-2 09/05 | நாள்-3 10/05 | நாள்-4 11/05 | நாள்-5 12/05 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 7 | 2 | 2 | 1 |
| 40 | 39 | 40 | 40 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 40 | 39 | 39 | 38 | 38 |
| 29 | 29 | 30 | 30 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 30 | 29 | 29 | 28 | 28 |
| 6 | 5 | 6 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 3 | 8 | 7 | 8 | 8 |
| 76-55 | 75-58 | 72-60 | 71-59 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-40 | 80-50 | 80-50 | 80-50 | 80-50 |
| 4 | 6 | 6 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 16 | 18 | 16 | 16 | 20 |
| தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் தென் மேற்கு | காற்றின் திசை | தெற்கு | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தெற்கு | தெற்கு |

### திருவாரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 09.05.2024 முதல் 12.05.2024 ஆகிய தினங்களில் லேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 38 - 40 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 28 - 30 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 - 50 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 16 – 20 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | வெப்பநிலை உயர்ந்து வருவதால் பயிர் கழிவு மூடாக்கு இட்டு மண் ஈரத்தினை பாதுகாக்கவும். மேலும் கோடை உழவு |
| | பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு, சணப்பை மற்றும் கொழிஞ்சி போன்றவற்றைத் தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| | | வரும் நாட்களில் மழையைப் பயன்படுத்தி கோடை உழவு செய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் பூச்சிகளின் கூண்டுப் புழுக்களை அழிக்கவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | வெப்பநிலை உயர்ந்து வருவதால் மாடுகளை (காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை) ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்க்கு இடம்பெயற்தலை தவிர்க்கவும். கால்நடை கொட்டகையில் போதுமான அளவு தண்ணீர் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும். |

## குறுஞ்செய்தி

வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயிர் கழிவு மூடாக்கு இட்டு மண் ஈரத்தினை பாதுகாக்கவும். மேலும் கோடை உழவு செய்யவும்.

.

**இயக்குநர்**